This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# சொர்க்கத் தீவு

www.writersujatha.com

*"It must always be kept in mind that although the computer may well take over the world at some future time one does not yet have to worry about one's daughter's ever marrying one."*

*அல்லும் பகலும் என்றன் அறிவை அறிவால் அறிந்து*
*சொல்லும் உரை மறந்து தூங்குவதும் எக் காலம்*

*– பத்திரிகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல் –*

ரகசியம்
சங்கேத எண்: 3–58/73
திட்டம்: கடற்புறா
முழுப்பெயர் : திருக்கடம்பூர் சுந்தரவரதன் சீனிவாச அய்ங்கார்
தினசரிப் பெயர்: அய்ங்கார் (மறுபடி) அய்ங்கார்.
வயது : 28
திருமணம் : ஆகவில்லை
உயரம்: 168 செண்டிமீட்டர்
எடை: 59க்
தொழில்: கம்ப்யூட்டர் என்ஜினியர்
மாத சம்பளம்: ரூ.2400 ஒவ்வொரு நான்காவது வாரமும்.
குடும்பம்: ஒரு தங்கை, ஒரு அம்மா, தங்கையின் திருமணத்திற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.
அனுப்பபட வேண்டியவர்கள்: லீலா, ஷோ (180651, 281731)
இடம் மற்ற விவரங்கள்: இணைப்பில்
தேதி : 23–3–71
கடத்தவேண்டிய முறை: விமானம் மூலம்
கடத்தவேண்டிய முறை: தங்கைக்குத் திருமணத்திற்குப் பையனைச் சந்திக்க லீலா அய்ங்காரை அழைத்துச் செல்லவேண்டும். ஒரு ஹோட்டல் அறைக்கு அல்லது விமானத்திற்கே நேராக அழைத்துச் செல்லலாம். கைதி முரட்டுத்தனம் செய்தால் பெண்டதால் கொடுக்கலாம்.
24–3–71ல் கலன் சொர்க்கத் தீவில் இருக்கவேண்டும்

முடிந்தது

**தி**ருக்கடாம்பி சுந்தரவரதன் சீனிவாச அய்ங்கார் என்பது என் முழுப்பெயர். திருக்கடாம்பி (எங்கே இருக்கிறது?) என் பூர்வீகம். சுந்தரவரதன் என்பது என் தகப்பனார் அவர் ஆத்மா சாந்தி அடைவதாக) சீனிவாச அய்ங்கார் என்பது என் பெயர். அதைப் பென்சீல் சீவுகிறாற் போல் சீவி, அய்ங்கார் என்று இந்த யுகத்துக்கு ஏற்பச் சுருக்கிக் கொண்டு விட்டேன். சீனிவாசன் என்று வைத்துக் கொள்ளவில்லை.